**eduresourceza.com**

Downloaded from eduresourceza.com

NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2016

# TAMIL FIRST ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours | 80 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 8 pages. Please check that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions.
4. All answers must be in TAMIL.
5. It is in your own interest to write legibly and to present your work neatly.

---

eduresourceza.com

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com

SECTION 1

பகுதி ஒன்று

கீழ்வரும் கதையை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.

## வாய்மையே வெல்லும்

கமலாவுக்கும் அன்று இரவு ஒரு கனவு வந்தது. அதில் காந்தி வந்தார். அவருடைய வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை உண்டாக்கிய அரிச்சந்திரன் நாடகம் நடந்தது. அதை அவர் பார்க்கும் காட்சி.

அதைத் தொடர்ந்து காந்தியின் வாழ்க்கைக் காட்சிகள். ‘சத்தியத்திற்காக..., வாய்மைக்காக... எதை வேண்டுமானாலும் தியாகம் செய்வேன். ஆனால் எதற்காகவும் சத்தியத்தைத் தியாகம் செய்யமாட்டேன்... !’காந்தி முழங்கினார். கனவில் காந்திக்கு அருகிலேயே கமலா நின்றாள். ‘நானும் எதற்காகவும் சத்தியத்தைத் தியாகம் செய்யமாட்டேன்’ என்று குரல் கொடுத்தாள்.

பொழுது விடிந்தது. கமலா படுக்கையைவிட்டு எழுந்ததும் நலங்கிள்ளியிடம் ஓடினாள்.

“அப்பா... அப்பா...”

“என்னம்மா...? ‘வாய்மையே வெல்லும்’ கட்டுரையை முழுவதும் நல்லா மனப்பாடம் செஞ்சுட்டியா? நான் எழுதிக் கொடுத்த கட்டுரையை உள்ளபடி பத்தி பிரிச்சு, தலைப்பு எழுதி. எடுத்துக்காட்டு, உவமை எதையும் விடாம எழுது...! முன்னுரையையும் முடிவுரையையும் உணர்ச்சி பொங்க எழுதியிருக்கேன்...! எல்லாத்தையும் மறக்காம அப்படியே எழுது...!”

அவர் ஆர்வத்தோடு விளக்கினார். அவளோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பது தெரிந்தது.

“என்னம்மா யோசிக்கிறே?”

“அப்பா... நான் போட்டியில கலந்துக்கலேப்பா...”

கமலா சொன்ன பதில் அவரை வியப்புக்கு உள்ளாக்கியது.

“ஏம்மா?”

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com

“எத்தனையோ தடவை வெவ்வேறு தலைப்பில் ஆசிரியருங்க எழுதிக் கொடுத்ததை மனப்பாடம் செஞ்சு பேசினேன்; கட்டுரை எழுதினேன்; பரிசு வாங்கினேன். ஆனா இந்தப் போட்டியில நான் கலந்துக்க முடியாதுப்பா!”

“ஏம்மா?”

“‘வாய்மையே வெல்லும்’கறது தலைப்பு. நீங்க எழுதிக் கொடுத்ததை நான் எழுதினதுன்னு பொய் சொல்லிப் போட்டியிலே கலந்துக்க என்னோட மனசு இடம் கொடுக்கலேப்பா.”

கமலா உறுதியாகச் சொன்னாள். அதைக் கேட்டதும் நலங்கிள்ளிக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் அலுவலகத்துக்குப் புறப்படும் அவசரத்தில் இருந்தார்.

“நல்லா யோசிச்சு முடிவெடும்மா...!”

“நல்லா யோசிச்சிட்டேன். இதுதானப்பா என்னோட முடிவு...”

“சரிம்மா...! உன் இஷ்டம்” என்றவர், அதற்குமேல் பேச நேரமில்லை. அலுவலகத்துக்குக் கிளம்பி விட்டார்.

(தமிழ் நாட்டுப் பாடநூல் கழகம்: பேராசிரியர் வி. கணபதி)

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com

1.1 கொடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிரப்புக:

1.1.1 அதில் -------------------- வந்தார். (1)

1.1.2 அதை அவர் பார்க்கும் --------------------. (1)

1.1.3 ---------------- விடிந்தது. (1)

1.1.4 எல்லாத்தையும் ----------------- அப்படியே எழுது. (1)

1.1.5 ஆனா இந்தப் -------------------- நான் கலந்துக்க முடியாதுப்பா. (1)

1.2 சரியான விடை எழுதுக:

1.2.1 கமலாவின் கனவில் யார் வந்த்து ? (2)

1.2.2 கனவில் கமலா சத்தியத்தைப் பற்றி என்ன குரல் கொடுத்தாள் ? (2)

1.2.3 பொழுது விடிந்ததும் கமலா யாரிடம் ஓடினாள் ? (2)

1.2.4 அப்பாவிடம் கமலா என்ன சொன்னாள் ? (2)

1.2.5 கமலா ஏன் போட்டியில் கலந்துக்கலே ? (2)

1.2.6 அப்பா அவளை என்ன கேட்டார் ? (2)

1.2.7 கமலா எடத்த முடிவு நல்லதா கெட்டதா ? (2)

1.3 எது **உண்மை**, எது **உண்மை அல்ல** :

1.3.1 கமலாவின் கனவில் காந்தி வந்தார் ? (1)

1.3.2 காந்தி சத்தியத்திற்காக தியாகம் செய்ய மாட்டார் ? (1)

1.3.3 பொழுது விடிந்த உடனே கமலா அப்பாவிடம் ஓடினாள் ? (1)

1.3.4 கமலா போட்டியில் கலந்துக்கொண்டாள் ? (1)

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com

1.4 ஒருமைக்கு பன்மை தருக :

1.4.1 கனவு (1)

1.4.2 நாடகம் (1)

1.4.3 படம் (1)

1.4.4 பரிசு (1)

1.5 எதிர்ச்சொல் தருக :

1.5.1 உண்மை (1)

1.5.2 நல்லது (1)

1.5.3 பதில் (1)

**30 marks**

## SECTION 2

## பகுதி இரண்டு

கீழ்வரும் பகுதியை சுருக்கி எழுதுக : ( சுமார் 15–20 சொற்கள் )

உடனே அரசர் "தம்பி! பயப்படாதே! இந்தப் புதையல் உனக்குத்தான். நான்தான் இந்தப் பரிசை வைத்தேன். சேவை மனப்பான்மை உடையவருக்கு அது கிடைக்கட்டும் என்றுதான் அப்படிச் செய்தேன், எங்கள் மக்களில் யாருக்குமே சேவை மனப்பான்மை கிடையாது. எனவே அவர்களுக்கு இந்தப் பரிசு கிடைக்கவில்லை. வெளியூரிலிருந்து வந்த உனக்குச் சேவை மனப்பான்மை இருக்கிறது. அதனால் உனக்கு இந்தப் பரிசு கிடைத்திருக்கிறது" என்று கூறினார்.

அறநெறிக் கதைகள்
(துணைப் பாடம்)

**10 marks**

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com

**SECTION 3** பகுதி மூன்று

3.1 கீழ்வரும் பகுதியைப் படித்து , பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுதுக:

அதனுள் நிறைய பொற்காசுகள் இருந்தன. அத்தோடு ஒரு சிறுதுண்டுக் காகிதமும் இருந்தது. 'சேவை மனப்பான்மை கொண்ட கரங்களுக்கு இந்தப் புதையல்' என்று அதில் எழுதப்பட்டிருந்தது. 'நான் இந்த ஊரைச் சேர்ந்தவனில்லை! வெளியூர்க்காரனாகிய நான் இப்புதையலை எடுத்துக் கொள்வது முறையாகுமா? இது இந்த ஊர் மக்களுக்காகத்தானே அறிவிக்கப்பட்டதாகத் தெரிகிறது! அரசரிடமே இதை ஒப்படைத்து விடுவோம்' என்று எண்ணியபடி அவன் அந்தப் புதையலை எடுத்துக்கொண்டு அரசரிடம் விரைந்தான். அரசரைக் கண்டான்.

(தமிழ் நாட்டுப் பாடநூல் கழகம்: க உமாதேவி)

3.1.1 பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும் ? (1)

3.1.2 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு பெயர்ச்சொற்கள் எழுதுக. (4)

3.1.3 மேற்காணும் பகுதிலியிருந்து மூன்று வினைச்சொற்கள் தருக. (3)

3.2 சேர்த்து எழுதுக :

3.2.1 பெயர் + சொல் (1)

3.2.2 குளி + பாட்டு (1)

3.2.3 அங்கு + சென்றான் (1)

3.2.4 இரண்டு + ஆயிரம் (1)

3.2.5 குதிரை + குட்டி (1)

3.3 பிரித்து எழுதுக :

3.3.1 வினைச்சொல் (1)

3.3.2 அந்தப்பெண் (1)

3.3.3 கனவுக்கண்டாள் (1)

3.3.4 அதைச்செய் (1)

3.3.5 கல்விப்பயணம் (1)

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com

3.4 எதிர்ச்சொற்கள் தருக :

3.4.1 இரவு (1)

3.4.2 அன்று (1)

3.4.3 பெரிய (1)

3.4.4 வாய்மை (1)

3.4.5 சிறி (1)

3.5 ஆண்பாலுக்கு பெண்பால் எழுதுக :

3.5.1 தம்பி (1)

3.5.2 செல்வன் (1)

3.5.3 பிச்சைக்காரன் (1)

3.5.4 தலைவன் (1)

3.5.5 ஆசிரியர் (1)

3.6 கீழ்வரும் சொற்களில் எச்சொல் பொருத்தமானது அல்ல :

3.6.1 வா ஓடு பணம் நில் (1)

3.6.2 பள்ளி பூனை வீடு கடை (1)

3.6.3 பத்து முப்பது ஒன்று நாற்பது (1)

3.6.4 இலை முட்டை கிளை வேர் (1)

Downloaded from eduresourceza.com

Downloaded from eduresourceza.com

3.7 காலங்கள் : முடிவு செய்க.

| எதிர்காலம் | நிகழ்காலம் | இறந்தகாலம் | |
|---|---|---|---|
| 3.7.1 ______ | வருகிறேன் | வந்தேன் | (2) |
| 3.7.2 ______ | பாடுகிறேன் | பாடினேன் | (2) |
| 3.7.3 ______ | போகிறேன் | போனேன் | (2) |
| 3.7.4 ______ | படிக்கிறேன் | படித்தேன் | (2) |

**40 marks**

**Total: 80 marks**

eduresourceza.com

Downloaded from eduresourceza.com